விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

266—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1176—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தில் மக்கள்தொகை அடிப்படையில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே உள்ளதால், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

267—

ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தல்

வினா எண் 1738—திரு. சு. ரவி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, மூதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்டதாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

268—

ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்தல்

வினா எண் 1806—திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை கிழக்கு தொகுதி, வண்டியூரில் 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வண்டியூரில் 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

269—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 2107—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவிதாங்கோடு மற்றும் பேச்சிப்பாறை ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை ஊராட்சி ஒன்றியம், திருவிதாங்கோடு மற்றும் பேச்சிப்பாறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

270—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2562—திருமதி எஸ். கஸ்தூரி சம்பத்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*